[2nd February 1966

Evasion of stamp duty

* 56 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to check evasion of stamp duty on transfers of properties by under-valuation of the properties?

The Hon. Sri V. RAMAIAH : Yes, Sir.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவற்றுக்கு விதிகள் பிறப்பிக்கப் பட்டுவிட்டனவா? அப்படியானல், எந்த முறையில் கண்டு அறிவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா : இன்னும் விதிகள் போட்டு அமல் செய்யக்கூடிய நிலையில் இல்லை. பல ஆலோசனைகள் இருந்து கொண்டிருக்கின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதை எந்தத் துறையினரிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது என்பதை அறியலாமா?

கனம் திரு. வெ. ராமையா : யார் செய்வது, எந்த முறையில் இதை அமல் நடத்துவது எந்தத் துறையில் விடுவது என்கிற விவரங்கள் எல்லாம் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

கோமுகி நீர்த்தேக்கத் திட்டம்

* 57 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கோமுகி நீர்த்தேக்கத் திட்ட வேலைகளுக்கென அங்கு வைக்கப்பட்டிருந்த சிமெண்ட் மூட்டைகள் 1964-ல் சுமார் 700 மூட்டைகள் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போய்விட்டது என்று கூறப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*b*) There was no loss of cement bags due to floods at Gomukhinadhi Project during 1964. But due to unexpected heavy rains in the Gomukhinadhi Project Dam area on the night of 7th December 1963 floods in the river rose to peak level at 11-00 p.m. and entered the store shed where cement was stocked. Three hundred and ninety-two bags of cement were damaged and their value, viz., Rs. 3,024-09 was written off by the Chief Engineer (Irrigation), as the loss was due to natural calamities.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த மூட்டைகளைக் கொண்டு வந்து அடுக்கும்போது, அங்கேயிருந்தவர் கள் 'இங்கே மூட்டைகளை வைக்காதீர்கள், திடீரென்று மழை

2nd February 1966]

வந்து தண்ணீர் அடித்துக்கொண்டு போய்விடும்' என்று சொல்லி யிருக்கிறார்கள். அதற்கு அங்கேயுள்ள என்ஜினியர்கள், 'எங்களுக் குத் தெரியாது உங்களுக்கு என்ன தெரியும்' என்று சொல்லிவிட்டு அந்த இடத்திலேயே மூட்டைகளை அடுக்கி வைத்திருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் ஏதோ முந்நூறு மூட்டைகள் என்று சொல்லுகிறார்கள். சுமார் 1,000 மூட்டைகள் வரை தண்ணீர் அடித்துக்கொண்டு போயிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மீதியுள்ளதை எல்லாம் அப்படியே கடைக்காலில் போட்டு மறைத் திருக்கிறார்கள், இப்போது தோண்டிப்பார்த்தாலும் கண்டு பிடிக்க லாம் என்று சொல்லுகிறார்கள். இப்படியிருக்க அரசாங்க இலாகா விலுள்ளவர்கள் செய்த தவறை அமைச்சர் அவர்கள் மறைத்து விட்டால், மேலும் தவறுகள் வளர்ந்து கொண்டே போகும். ஆகவே, இனிமேலாவது இவ்விதமான தவறுகள் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்பு கிறேன்.

MR. SPEAKER : What is the question of the hon. Member? The hon. Member, if he has got any evidence, should put it specifically. The question should be put with responsibility. The hon. Member should specifically ask whether such and such incident has taken place so that the Hon. Minister concerned may examine it and give a reply.

அவர்கள் சொல்லுகிறார்கள், இவர்கள் சொல்லுகிறார்கள் என்று கேள்வி கேட்பது முறையல்ல.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தச் சேதம் ஏற்பட்டதற்கு அந்தத் திட்டத்தின் பொறுப்பான அதிகாரிகளின் அஜாக்கிரதை காரணமா என்று விசாரிக்கப்பட்டதா? அப்படியானால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. வெ. ராமைய்யா : சீஃப் என்ஜினியரே விசாரணை செய்திருக்கிறார். திட்ட வேலை நடந்துகொண்டிருக்கும்போது வேலை நடக்கும் இடத்திற்கு அருகாமையில் தான் இது போன்ற பொருள்களை சேமித்து வைக்க வேண்டிருக்கிறது. திடீரென்று எதிர்பாராமல் மழை பெய்து, வெள்ளம் ஏற்பட்டு இருக்கிறது. சேதத்தைத் தடுப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தும் இருட் டின் காரணமாக அவற்றை அகற்ற முடியாமல் போயிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்களுடைய பதில் தப்போ, தவறோ என்று குற்றம் சொல்லவில்லை. இதை மறுபரிசீலனையாவது செய்ய சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்கள் குறிப்பிட்டபடி கனம் அங்கத்தினர் கேள்விப்பட்ட விவரம் பூராவையும் எழுதி அனுப்பினால் அது பற்றி விசாரணை செய்யலாம்.